தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலூகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

கனி பிரின்டிங் DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மந்தில் மேஷினிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

Vol: 03 | Issue: 226 | 4 Pages | 24.06.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 226 | 4 பக்கங்கள் | 24.06.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்

விளக்கம்:
வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் விஜயை சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த மதுரவாயல் எம்.எல்.ஏ. ரேவந்த் சரண்

சென்னை: மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரேவந்த் சரண் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. ஜோசப் விஜய் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

அப்போது, மாநில வளர்ச்சி, மக்கள் நலன் மற்றும் மதுரவாயல் தொகுதி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலமைச்சரின் தலைமையில் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மக்கள் நல நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்த ரேவந்த் சரண், முதலமைச்சர் அவர்கள் நல்ல உடல்நலத்துடனும், நீண்ட ஆயுளுடனும் மக்கள் சேவையில் தொடர்ந்து பல சாதனைகள் படைக்க வாழ்த்துகளை தெரிவித்தார்.

தமிழக வெற்றிக்கழக ஆட்சியில் பெண்கள் வெளியே நடமாட முடியவில்லை நடிகை ஜூலி குமுறல்

"தமிழக மக்களின் குரல்வளையை தமிழக வெற்றிக்கழக அரசு நசுக்கி வருகிறது என திமுக மாணவர் அணியினர் காட்டம்.

சென்னை சைதாப்பேட்டை கலைஞர் பொன் விழா வளைவு அருகில் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திமுக மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக தங்களது கண்டனங்களை பதிவு செய்தனர்... இதில் கலந்து கொண்ட பின்பு செய்தியாளர்களிடம் பேசிய நடிகை ஜூலி.... தமிழ்நாட்டில் தினம் தோறும் பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவது பெண்கள் வெளியே நட முடியாத சூழலை உண்டாக்கியுள்ளதாகவும் தினம்தோறும் தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றச்சம்பவங்கள் நடைபெற்று வருவது வேதனை அளிப்பதாக உள்ளது என கூறினார்...

டிசிஎஸ் நிறுவனம், 2026ம் ஆண்டுக்கான 'டிசிஎஸ் இன்குவிசிட்டிவ் 2026' போட்டியை அறிமுகப்படுத்துகிறது;

tcs InQuizitive 2026

தகவல் தொழில்நுட்பச் சேவைகள், ஆலோசனை மற்றும் வணிகத் தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்

பள்ளிகளுக்கு இடையேயான தனது முதன்மையான வினாடிவினா போட்டியான 'டிசிஎஸ் இன்குவிசிட்டிவ்' ன் 2026ம் ஆண்டுக்கான பதிப்பு குறித்து அறிவித்துள்ளது.

இதற்கான முன்பதிவுகள் தற்போது சென்னை மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது 28ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வினாடிவினா போட்டி, இளம் மாணவர்களிடையே மிகவும் அதிகம் விரும்பப்படும் ஒரு நிகழ்வாக உருவெடுத்துள்ளது.

டிசிஎஸ் நிறுவனத்தின் தலைமை மனித வள அதிகாரி சுதீப் குன்னுமல் கூறுகையில், "ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் 2025 க்ளோபல் ஏஐ வைப்ரான்சி டூல் சுட்டிக்காட்டியுள்ளபடி, செயற்கை நுண்ணறிவு (AI) துறையில் போட்டித்தன்மை மிக்க நாடுகளின் வரிசையில் உலகின் மூன்றாவதுபோட்டித்தன்மைவாய்ந்தநாடாகஇந்தியாஉருவெடுத்துள்ளது, இந்தியாவின் டிஜிட்டல் பயணத்தில் இது ஒரு முக்கிய மைல்கல்லாகும். உலகம் ஏஐ (AIpowered) தொழில்நுட்பத்தினால் முன்னெடுக்கப்படும் எதிர்காலத்தை நோக்கி வேகமாக நகர்ந்து வருகிறது. இந்த வேளையில், நவீன கண்டுபிடிப்புகள், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீண்டகால மதிப்பை ஊக்குவிக்கும் உலகின் மிகப்பெரிய ஏஐ சார்ந்த தொழில்நுட்பச் சேவை கட்டமைப்புகளில் ஒன்றை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

டிசிஎஸ் இன்குவிசிட்டிவ் போன்ற முயற்சிகள் மூலம், மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவும், திறமைகளை வளர்க்கவும், அடுத்த தலைமுறையினர் ஏஐயின் மாற்றுத் திறனைப் பயன்படுத்த அதிகாரமளிக்கவும் நாங்கள் விரும்புகிறோம்; என்றார்...

"5 நிமிடம் பேசியதற்கே கொளத்தூர் ஆட்டம் கண்டது": முதல்அமைச்சர் விஜய் பேச்சு

சென்னை, ஜூன் 24

சட்டசபை நிறைவு நாளான இன்று, உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து முதல்அமைச்சர் ஜோசப் விஜய் பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

மக்கள்தயவால்தவெக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. திமுகவின் தயவால் தவெக ஆட்சி நடைபெறவில்லை. சோபா மாடல் ஆட்சி என்று சொல்கிறார்கள். சோபா மாடல் என்றால் என்னவென்று புரியவே ரொம்ப நாள் ஆகிவிட்டது. ஷோபா செட், பர்னிச்சர் பிஸினஸ் எல்லாம் வெளியே பண்ணுங்கள். சட்டசபையில் வேண்டாம்.

தவெக ஆட்சியில் பட்டியலினத்தவர் 8 பேருக்கு அமைச்சர் பதவி. ஊழலில் ஊறிப்போனவர்கள் ஆட்சி, அதிகாரத்தில் பங்கு தர மாட்டார்கள். கட்சி நிதி என்ற பெயரில் கொள்ளை. மக்கள் பணத்தை தொடமாட்டோம். தொடவிட மாட்டோம். மக்கள் பணத்தை தொட்டவர்களை விட மாட்டோம். 5 நிமிடம் பேசியதற்கே கொளத்தூர் இந்த ஆட்டம் ஆடியது. பேசுங்க... பேசுங்க.. என்றால் நான் என்ன பேசுவது.

தற்போதைய மத்திய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நிற்பவர்கள்தான் நாம். அதே சமயம், எதற்கெடுத்தாலும் கண்ணை மூடிக் கொண்டு மத்திய அரசுடன் மோதல் போக்கை விரும்புகிறவர்கள் நாம் அல்ல. நமக்கு எப்போதுமே தமிழகத்தின் வளர்ச்சி மட்டும்தான் முக்கியம். அதற்காக மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கவே மாட்டோம். மக்களுக்கோ, சிறுபான்மை சகோதரர்களுக்கோ, நம் ஆதரவு இயக்கங்களுக்கோ எந்த சந்தேகமும் வேண்டாம். நாம் யாரின் டீமும் இல்லை. நாம் Pure ஆன People's Team. இவ்வாறு அவர் கூறினார்.

முதல்அமைச்சர் விஜய் பேசிக் கொண்டிருந்தபோது அவரது பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்த திமுக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டு சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தது குறிப்பிடத்தக்கது.

ஆட்சி பொறுப்பு இருந்தாலும் இல்லை என்றாலும் இந்த தமிழ்நாட்டில் திமுக ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாங்க போட்ட பாதையில் தான் யாராக இருந்தாலும் பயணிக்க முடியும்: எம்.பி பேச்சு

சென்னை திமுக வடக்கு மாவட்டம் சார்பில் இராயபுரம் மேற்கு பகுதி தி.மு.க மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு 1003 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் சென்னை நார்த்வால் ரோட்டில் உள்ள முதல்வர் திருமண மாளிகையில் நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, நலத்திட்டஉதவிகள்வழங்கிசிறப்புரையாற்றினார்.

அதிலிருந்து என் பையன் என்னைப் பார்த்து அந்த கட்சி உங்களுக்கு என்ன செய்தது என்ற கேள்வியை கேட்பதில்லை. இனி வரும் காலங்களில் இந்த கட்சியை விட்டு போக வேணடாம் என்று என் பையன் ஒவ்வெரு நாளும் கூறுகிறார் என்று அந்த சகோதரி சொன்னார். இதைத்தான் தலைவர் கலைஞரிடம் ஒரு முறை கேட்டபொழுது "உங்க குடும்பம் அப்ப டின்னா" , என்னுடைய குடும்பத்தை ஒரு புகைப்படத்திற்குள் அடைத்து விட முடியாது, தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் என் குடும்பம் இருக்கு என்று சொல்லிய தலைவன்தான் தலைவர் கலைஞர் அவர்கள். மற்றவர்கள் சகோதரர்களே தோழர்களே என்று அழைக்கும் பொழுது அங்கே பெண்களுக்கு இடம் இருப்பதில்லை, எந்த வித தயக்கமும் இல்லாமல் ஊடகங்களை சந்தித்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளித்த தலைவர் கலைஞர். ஆனால் இன்று, எத்தனையோ தலைவர்கள் டெல்லியிலிருந்து தமிழ்நாடு வரைக்கும் பத்திரிகையாளர்களை சந்திப்பதற்கு கூட தயாராக இல்லாத ஒரு நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மக்களுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லுவதற்கு தயாராக இல்லாத, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாத ஒரு நிலையை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு உண்மையான ஜனநாயக தலைவனின் பிறந்த நாளை கொண்டாடுகிறோம் என்ற அந்த பெருமை நமக்கு அத்தனை பேருக்கும் இருக்கிறது என்று பேசினார்.

நிதிநிலை அறிக்கை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட்ட அரசு பார்ட்டி ஃபண்ட் பற்றி வெள்ளை அறிக்கை விடுமா.

முதலமைச்சர் வாய் திறந்து பேசுங்கள் என்று சொன்னால் சட்ட ஒழுங்கு பற்றியும் பெண்கள் மீது நடத்தப்படும் வன்கொடுமைகளை பற்றியும் பேசவில்லை.

அல்லு அர்ஜுன் மீது வழக்கு தொடுத்தது போல்; உங்கள் மீது வழக்கு தொடுத்து இருந்தால் உங்கள் கேரியர் உச்சம் கலண்டருக்கும். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அமைச்சர் சிவசங்கர் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது இதில் பேசியதாவது...

சிவசங்கர் (முன்னாள் அமைச்சர்)

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பதிலுரை அளித்த முதலமைச்சர் விஜய் ஒரு முதலமைச்சர் பொறுப்பிற்கான தகுதியுடன் நடந்து கொள்ளவில்லை. நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அரசின் மீது வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வேண்டும் என்று சொன்னார்.

தேர்தல் மோட் இல் இருந்து இன்னும் சிஎம் மோடுக்கு மாறாமல் இருக்கிறார். சட்டமன்றத்தை ஷூட்டிங் போல நினைக்கிறார்...

பெண்கள் மீதான வன்முறை, சிறுமிகள் மீதான பாலியல் தாக்குதல்கள் ஆகியவை குறித்து இதுவரை திமுக போராட்டங்களை முன்னெடுக்கவில்லை, ஆனால் பொது மக்கள் போராடி வருகிறார்கள். இவை எவற்றிற்கும் அவர்கள் பதிலளிக்கவில்லை.

திசை திருப்புவதற்காக திமுக மீது தாக்குதல் நடத்துவதும், குட்டிக்கதை சொல்வதும் முதலமைச்சர் ஆக நடந்து கொள்ளும் நடைமுறைகளை விட்டுவிட்டு இன்னும் நடிகராகவே தன்னை நினைத்துக் கொண்டு செயல்படுகிறார் என்பது வருத்தத்திற்கு உரியது.

நாங்கள்காத்திருக்கிறோம், ஆனால் பொதுமக்களோ, விவசாயிகளோ காத்திருக்கதயாராக இல்லை. சிபிஎம் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது, இதை திமுக தூண்டிவிட்டதா.

இசைநிகழ்ச்சி நடைபெறும் போது குட்டிக்கதை சொல்வது போல இன்றும் குட்டிக்கதை சொல்கிறார்... பாமகதலைவர் அன்புமணி ராமதாஸ் சொன்னார், மகன் என்றால் மு.க ஸ்டாலின் போல இருக்க வேண்டும் என்று, எங்களுக்கு அறிவுரை கூறும் வேலையை முதலமைச்சர் நிறுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் குடும்பத்தை முதலில் பாருங்கள், அடுத்தவர் குறை சொல்வதை பின்பு பார்க்கலாம். சட்டம் ஒழுங்கு பிரச்சினை 6 மாத காலம் அவகாசம் கொடுக்க வேண்டிய பிரச்சனை அல்ல. இன்று உடல்நிலை சரியில்லை என்றால் இன்று தான் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். பாலியல் துன்புறுத்தலுக்கு குழந்தை ஆளானால் அது இன்று தான் விசாரிக்க வேண்டும். உங்கள் மீது ஒன்றிய அரசு கொடுத்திருக்கக் கூடிய தகவல் என்ன. "உங்கள் திரைப்படத்திற்கு கருப்பு பணத்தில் சம்பளம் வாங்கியதாக உங்கள் மீது புகார் உள்ளது. உங்கள் போக்கை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் உயர்கல்வித்துறை அமைச்சர் உங்கள் சினிமா பாடலை போட்டு டான்ஸ் ஆடுகிறார். அவரிடம் போய் சொல்லுங்கள்... நேற்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பேசும் போது மூன்று அமைச்சர்கள் குறிக்கீடு செய்தனர்... ஆனால் இன்று முதலமைச்சர் பேசும்போது குறுக்கீடு செய்ய வேண்டாம் என்று சபாநாயகர் சொல்கிறார்... ஆனால் இன்று சிங்கிள் டேக்கில் இந்த ஷாட்டை முடிக்க வேண்டும் என நினைத்து எதிர்க்கட்சித் தலைவரை தவிர்ப்பதற்கான முயற்சி எடுத்தீர்கள்... முன்னாள் அமைச்சர் மீது வழக்கு தொடுக்க தயாராக இருக்கிறீர்களா, தொடர்ந்து பாருங்கள், தயாராக இருக்கின்றோம். இது எதிர்கொள்ள திமுக தயாராக இருக்கிறது... இந்திரா காந்தி தெரியுமா உங்களுக்கு, அவர் கொண்டு வந்த மிசா சட்டத்தை பத்தி தெரியுமா, அதை எதிர்த்து போரிட்ட எங்கள் தலைவர் எத்தனை நாட்கள் சிறையில் இருந்தார் என்று தெரியுமா... எல்லாஅரசியலையும்ஒடுக்கு முறைகளையும் பார்த்த இயக்கம் திமுக. எங்கள் வரலாற்றை காங்கிரஸ் இடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்... திமுக உடைய ஆதரவு வாக்குகளில் வெற்றி பெற்றவர்களின் தோளில் தான் நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள்... உங்கள் கூட்டணியில் இருக்கக்கூடிய வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினரே எனக்கு வெற்றிக்கு பாடுபட்ட திமுக தலைவருக்கு நன்றி என தெரிவித்தார்... பார்ட்டி பண்ட் என்பதற்கு ஆதாரம் இருக்கின்றதா, வெள்ளை அறிக்கை போன்று ஆதாரம் இருந்தால் வெளியிடுங்கள்... சட்டமன்றத்தில் பேசி ஒளிபரப்பு விட்டு, ரீல்ஸ் போட்டு தங்களுக்கு வாக்களித்தவர்களை மகிழ்ச்சி படுத்துவதற்காக தான் செய்கின்றீர்கள்... ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள், சந்திப்பதற்கு திமுக தயாராக இருக்கிறது...

உங்களுக்கும், வி. எஸ் பாபுவுக்கும் என்ன வித்தியாசம். வி.எஸ் பாபு கேட்டகிரி தான நீங்களும்..மற்றவர்கள் கேலி செய்வதே கிண்டல் செய்வதை உடல் மொழியில் தெரிவிப்பதைதிரைப்படநடிகராகஇருக்கும் போது பேசியதை விட்டுவிட்டு முதலமைச்சராகசெய்வதுசரியல்ல... லஞ்சலாவண்யமாகபோகபணத்தை கஜானாவில் நிரப்புகின்றோம் என்று சொல்வது சினிமா வசனம்... எங்கள் முதலமைச்சர் கருணையோடு நடந்து கொண்டதால்தான் நீங்கள் இப்படி பேசுகின்றீர்கள்... அல்லு அர்ஜுனா போல உங்கள் மீது ஒரு வழக்கு தொடர்ந்திருந்தால்உங்கள்கேரியரின் உச்சம் கழன்றிருக்கும்...

சென்னை அண்ணாநகரில் கண்ணைக்கட்டு கொண்டு 28 மாணவர்கள் 26 யோகாசனங்கள் செய்து உலக சாதனை படைத்தனர்

சென்னை அண்ணாநகரில் அமைந்துள்ள வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சிறப்பு யோகாஉலகசாதனைநிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அறக்கட்டளை நிறுவனதலைவர் பிரீத்தி அறிவுடை நம்பி மற்றும் தாளாளர் நித்தின் அறிவுடைநம்பி ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளி முதல்வர் டாக்டர் அமுதவல்லி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் யோகாவின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலை பள்ளியை சேர்ந்த 28 மாணவர்கள் கண்களைக் கட்டியபடி 26 வகையான யோகாசனங்களை செய்து அசத்தினர்.

மாணவர்களின் இந்த அபாரத் திறனை நோவா உலக சாதனை நிறுவனம் உலக சாதனையாக அங்கீகரித்தது. இதனைத் தொடர்ந்து சாதனை படைத்த மாணவர்களுக்கு நோவா உலக சாதனை அமைப்பின் இந்திய இயக்குனர் திலீபன் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை மாணவர்களுக்கு வழங்கி கவுரவித்தார்.

மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, சிறந்த ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக பள்ளி நிர்வாகம் தெரிவித்தது. இந்த உலக சாதனை நிகழ்ச்சி மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

படப்பை அருகே குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத பாருடன் இயங்கும் டாஸ்மாக் கடையை அகற்ற கோரி கலெக்டரிடம் கிராம மக்கள் கோரிக்கை மனு

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே ஆத்தணஞ்சேரி சுபஷ்ரீ நகரில் குடியிருப்பு பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடை எண் 4096ஐ அகற்றக் கோரி, அப்பகுதி பெண்கள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் சினேகாவை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அந்த மனுவில், டாஸ்மாக் கடைக்கு முறையான பார் அனுமதி இல்லாத நிலையிலும், தகரக் கொட்டகையில் சட்டவிரோதமாக பார் அமைத்து செயல்பட்டு வருவதாகவும், இதனால் அப்பகுதியில் மதுபாட்டில்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள் சிதறிக் கிடப்பதுடன், போதையில் உள்ளவர்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பெண்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் அப்பகுதியைக் கடந்து செல்வதில் சிரமம் ஏற்படுவதாகவும், சாலையோரத்தில் போதையில் இருப்பவர்கள் சிறுநீர் கழிப்பது உள்ளிட்ட அருவருப்பான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து டாஸ்மாக் நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும்

கூறப்பட்டுள்ளது. சமீபத்தில் அந்த பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்தில் ஒருவருக்கு கால் உடைந்து பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை அவர் பெற்று வருவதாகவும், இது போல் மதுபானக் கடையால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மனுவைப்பெற்ற மாவட்ட ஆட்சியர் சினேகா, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில், குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத பாருடன் செயல்படும் டாஸ்மாக் கடையை மாவட்ட நிர்வாகம் உடனடியாக அகற்றாவிட்டால், கிராம மக்கள் ஒன்றிணைந்து மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபடுவோம் என அப்பகுதி பெண்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பேது மக்கள் .பேட்டி உள்ளது..

தினகனி

24.06.2026

தமிழகத்தில் 18 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை, ஜூன் 24

தமிழகம் முழுவதும் 18 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தி வருகிறது. 2017ல் அரசு பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர் தேர்வு மோசடி தொடர்பாக சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களின் 18 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். 1,058 விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு நடத்தியதில் குளறுபடி நடந்ததாக எழுந்த புகாரில் 156 பேர் மீது மத்திய குற்றப்பிரிவு வழக்குப்பதிவு செய்தது. 2021ல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்திருப்பதாக கூறி அமலாக்கத்துறையினர் தற்போது சோதனை நடத்தி வருகின்றனர்.

கோவையில் கொடுமை; புதைக்கப்பட்ட வியாபாரியின் உடலை தோண்டி எடுத்து ரூ.4 லட்சம் மதிப்பிலான நகை திருட்டு

கோவை ஜூன் 24

கோவையில் புதைக்கப்பட்ட மீன் வியாபாரியின் உடலில் இருந்த ரூ.4 லட்சம் மதிப்பிலான நகையை 3 பேர் கொண்ட கும்பல் திருடி சென்ற கொடுமை நடந்துள்ளது.

கோவை சவுரிபாளையம் பகுதியை சேர்ந்தவர் நாகராஜ் (வயது 60). மீன் வியாபாரம் செய்து வந்த அவர், கடந்த 6ந்தேதி உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். நாகராஜ் தனது கழுத்தில் மீன் டாலர் பொறித்த மூன்றரை பவுன் தங்க சங்கிலியைஎப்போதும்அணிந்து இருப்பார். ஆசையுடன் அணிந்து இருந்த அந்தநகையுடன் அவரது உடலை அடக்கம் செய்ய மகன்கள், உறவினர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி அவரது உடல் சவுரிபாளையத்தில் உள்ள மாநகராட்சி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த நிலையில் 16வது நாள் காரியத்துக்காக அவரது உடல் புதைக்கப்பட்ட இடத்தை சுத்தம் செய்ய மகன் வெங்கடேஷ்குமார் மற்றும் உறவினர்கள் சென்றனர். அப்போது அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் குழி தோண்டப்பட்டு இருந்தது.

இதுபற்றி அந்த சுடுகாட்டில் தண்ணீர் விடும் வேலையை செய்து வரும் அதே பகுதியை சேர்ந்த கார்த்திகேயனிடம் (வயது 27) விசாரித்தனர். அவர், அதே பகுதியை சேர்ந்த சக்திவேல் (வயது 26), மணிகண்டன்(வயது 25) ஆகியோர் சம்பவத்தன்றுஇரவில்சுடுகாட்டுக்கு வந்து நாகராஜின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் குழி தோண்டி கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை திருடிச்சென்றனர் என கூறினார். அதன் மதிப்பு ரூ.4 லட்சம் இருக்கும்.

இதுகுறித்த புகாரின்பேரில் சக்திவேல், மணிகண்டன், கார்த்திகேயன் ஆகிய 3 பேர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். நாகராஜின் வீட்டின் அருகில்தான் சக்திவேலும், மணிகண்டனும் குடியிருந்து வருகின்றனர். அவரது உடலை அடக்கம் செய்யும்போதும், அவர்கள் உடன் இருந்தனர். அப்போது அவரது கழுத்தில் நகை இருந்ததை பார்த்தனர். சரிவர வேலைக்கு செல்லாமல் பணத்திற்கு திண்டாடிய இவர்கள், உடலின் கழுத்தில் இருந்த நகையை திருட முடிவு செய்து, மயானத்துக்கு சென்றுள்ளனர்.

அங்கு பணியில் இருந்த கார்த்திகேயனிடம் பண ஆசை காட்டி தங்களது திட்டத்தை கூறியுள்ளனர். பின்னர் நாகராஜின் உடலின் தலைப்பகுதி இருந்த இடத்தில் குழிதோண்டி நகையை திருடியுள்ளனர். அந்த நகையை விற்று, கிடைத்த பணத்தை சக்திவேலும் மணிகண்டனும் பங்கு போட்டுக்கொண்டனர். கார்த்திகேயனுக்கு ரூ.30 ஆயிரம் கொடுத்துள்ளனர். கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ள இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 3 பேரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபருக்கு 20 ஆண்டுகள் சிறை

தேனி, ஜூன் 24

உத்தமபாளையம் பகுதியை சேர்ந்தவர் விஜய் (வயது 26), கூலித்தொழிலாளி. இவர் கடந்த 2024ம் ஆண்டு, 16 வயது சிறுமியிடம் காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி பழகினார். பின்னர் அந்த சிறுமியை அவர் பாலியல் பலாத்காரம் செய்தார். பாதிக்கப்பட்ட சிறுமி உத்தமபாளையம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து விஜய்யை கைது செய்தனர். மேலும் இந்த வழக்கு தேனி மாவட்ட போக்சோ வழக்குகளுக்கான சிறப்பு கோர்ட்டில் நடந்தது. வழக்கு விசாரணை முடிவில் விஜய்க்கு

20 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.20 ஆயிரம் அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் 1 ஆண்டு சிறை தண்டனையும் விதித்து நீதிபதி எழில் நேற்று தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.2 லட்சம் நிவாரணமாக தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

அமோனியா வாயு கசிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக உயர்வு

திருவள்ளூர், ஜூன் 24

அமோனியா வாயு கசிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் பகுதியில் மீன், இறால் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் செயின்ட் பீட்டர்பால் என்ற தொழிற்சாலையில் நேற்று முன்தினம் அமோனியா வாயு கசிவு ஏற்பட்டு 77 தொழிலாளர்கள் மயக்கம் அடைந்தனர். அவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். இதில்ஜூவான், மலோத்தி ஆகிய 2 பெண் தொழிலாளர்கள் அன்றைய தினமே உயிரிழந்தனர்.

திருவள்ளூர் பகுதியில் உள்ள 2 தனியார் ஆஸ்பத்திரிகளில் 49 பேரும், எஞ்சியவர்கள் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரி மற்றும்

ஸ்டான்லி ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலர் வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். டாக்டர்கள் தொடர்ந்து அவர்களை கண்காணித்து வருகின்றனர்.

சிகிச்சையில் இருந்த 75 பேரில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டனர். அதாவது ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த பூர்ணிமா ஜூங்கா (18), ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் கீதா ஜூவாங்கா (24), தனியார் ஆஸ்பத்திரியில் சபினி (22) ஆகிய 3 பெண் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். ஸ்டான்லி ஆஸ்பத்திரி மற்றும் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த பாப்பவதி ஜூங்கா (19), புலோமினி ஆகியோரும் உயிரிழந்தனர். மாலையில் ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த சீதா(23) என்ற பெண் உயிரிழந்தார். இதனால் பலி எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது.

இதுவரை உயிரிழந்த 8 பேரும் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், திருவள்ளூர் பெரியபாளையத்தில் உள்ள ஆலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டு ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அசாம் மாநிலத்தை சேர்ந்த அஞ்சிலா சுரின்(26) என்ற பெண் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார். இதன்மூலம் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 60 தொழிலாளர்கள் தனியார் மற்றும் அரசு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில், சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது. இதனால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என கூறப்படுகிறது.

கிணற்றில் தவறி விழுந்த குட்டி யானை: 3 மணி நேர போராட்டத்திற்குப் பின் மீட்பு

திருவனந்தபுரம், ஜூன் 24

கேரளம் மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் தண்ணித்தோடு மேக்கானத்தில் உள்ள ஒரு ரப்பர் தோட்டத்தில் 20 அடி ஆழ கிணறு உள்ளது. அந்த கிணற்றில் தண்ணீர் கிடையாது.

காட்டு பகுதியில் இருந்து ரப்பர் தோட்டத்திற்குள் புகுந்த 2 வயது குட்டி யானை அந்த கிணற்றுக்குள் தவறி விழுந்தது.

தகவல் அறிந்ததும் வனத்துறையினர் விரைந்து வந்து பொக்லைன் எந்திரத்தின் உதவி



யுடன் ஒரு பக்கம் கிணற்றை சமப்படுத்தி, குட்டி யானை வெளியே வருவதற்குஒருபாதையை ஏற்படுத்தினர். 3 மணி நேரத்துக்கு பின்னர் அந்த பாதை வழியாக குட்டி யானை வெளியேறி, காட்டுப்பகுதியை நோக்கி ஓடியது.

சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபருக்கு 10 ஆண்டுகள் சிறை

சென்னை, ஜூன் 24

சென்னையை அடுத்த மடிப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் கருணா என்ற கருணாகரன் (வயது 24). இவர் அதே பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவருடன் பழகி வந்துள்ளார். நாளடைவில், சிறுமியை காதலிப்பதாக கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். கருணாகரன் பல முறை சிறுமியை வன்புணர்வு செய்ததால், அந்த சிறுமி கர்ப்பமடைந்து, ஆண்குழந்தையை பெற்றெடுத்தார்.

குழந்தை பிறந்த பிறகு, தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு சிறுமி கருணாகரனிடம் கேட்டுள்ளார். ஆனால், இந்த குழந்தை என்னுடையது அல்ல, உன்னை திருமணம் செய்து கொள்ள முடியாது எனக்கூறி கருணாகரன் சிறுமியை ஏமாற்றினார்.

இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமி, மடிப்பாக்கம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட டி.என்.ஏ பரிசோதனையில், சிறுமிக்கு பிறந்த குழந்தையின் தந்தை கருணாகரன் தான் என்பது உறுதியாக நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கு செங்கல்பட்டு மாவட்ட போக்சோ கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கின் இறுதி விசாரணை முடிவடைந்த நிலையில், நீதிபதி நசிமா பானு அதிரடி தீர்ப்பை வழங்கினார். அதில், சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக கருணாகரனுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.1,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும் அபராதத் தொகையை கட்டத் தவறினால், மேலும் ஒரு ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் லட்சுமி ஆஜராகி வாதாடினார்.

தெரு நாய்களை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன? அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜூன் 24

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் தெரு நாய்களை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய தமிழ்நாடு, புதுச்சேரி மாநில அரசுகளுக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

தெருநாய்கள் தொல்லை குறித்து தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, "கடந்த 4 மாத காலத்தில் மட்டும் சுமார் 2 லட்சத்து 63 ஆயிரம் பேரை தெருநாய்கள் கடித்துள்ளது. இதில் 17 பேர் இறந்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. எனவே, பேருந்து மற்றும் ரெயில் நிலையங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட பொது இடங்களில் இனப்பெருக்க கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பிடிக்கப்படும் தெரு நாய்களை மீண்டும் அதே இடங்களில் விடாமல் அவற்றை பராமரிப்பு மையங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதற்காக அனைத்து மாவட்டங்களிலும் போதிய எண்ணிக்கையில் இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்களை ஏற்படுத்த வேண்டும். நாய்க்கடி தடுப்பூசி மையங்களில் போதிய எண்ணிக்கையில் கால்நடை மருத்துவர்கள், ஊழியர்களை நியமிக்க வேண்டும். பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் தெரு நாய்களை அப்பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்" என்று உத்தரவிட்டது.

மேலும், அந்த உத்தரவில், "தெரு நாய் தொடர்பான

இந்த உத்தரவுகளை உடனடியாக அமல்படுத்தும் வகையில், அனைத்து ஐகோர்ட்டுகளும் தாமாக முன் வந்து வழக்குகளை விசாரணைக்கு எடுத்து, கண்காணிக்க வேண்டும்" என்று கூறியிருந்தது.

அந்த உத்தரவின் அடிப்படையில், சென்னை ஐகோர்ட்டு தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், "சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் தெருநாய்களை பொது இடங்களில் அப்புறப்படுத்துவது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்பது குறித்து தமிழ்நாடு, புதுச்சேரி மாநில அரசுகள் 4 வார காலத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த வழக்கை 4 வாரத்துக்கு தள்ளிவைக்கிறோம். குறிப்பாக கல்வி நிலையவளாகங்களில் சுற்றித்திரியும் தெரு நாய்களை அப்புறப்படுத்த தமிழ்நாடு, புதுச்சேரி மாநில அரசுகள் அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளனர்.

மழை நீரில் நனைந்து வீணாகும் நெல் மூட்டைகள்: மூடி வைத்து அரசு பாதுகாக்க வேண்டும் எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜூன் 24

தமிழகத்தில் உள்ள அனைத்து திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையங்களிலும் குடோன்கள் அமைக்க உடனடி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஆட்சியாளர்களின்அலட்சியத்தாலும், அஜாக்கிரதையாலும்அரசின்திறந்தவெளி கிடங்குகளில் விவசாயிகள் பாடுபட்டு விளைவித்த நெல் மூட்டைகள் முறையாக பாதுகாக்கப்படாமல் மழை நீரில் நனைந்து முளையிட்டு வீணாவது தொடர்கதையாகி உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகால திமுக ஆட்சியில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குவேளாண் பெருமக்களால் கொண்டு வரப்பட்ட நெல் மணிகள், எப்படி வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து வீணானதோ, அதேபோல் மாற்றம் கொண்டு வருவோம் என்று சொன்ன தற்போதைய த.வெ.க. ஆட்சியிலும், எந்த மாற்றமும் இல்லாமல் நெல் மணிகள்மழையில்நனைந்து வீணாகின்றன. நெல் கொள்முதல் கிடங்குகளுக்கு குடோன்கள் இல்லை என்றாலும், நெல் மூட்டைகளைப் பாதுகாக்க தார்ப்பாய்கள் கூட இல்லாத அவலம் தொடர்கிறது.

ஓரிரு நாட்களுக்கு முன்பு பெய்த கோடை மழையால் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தை அடுத்த பட்டீஸ்வரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில், திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் முதல் 1 லட்சம் வரையிலான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர், ராமானுஜபுரம், விருதுநகர் மற்றும் ராணிப்பேட்டை போன்ற இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் முறையான பாதுகாப்பு மற்றும் தார்ப்பாய் வசதி இல்லாததால் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகின.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்பாமல் பல மாதங்களாகத் தேக்கி வைத்ததும், போதிய தார்ப்பாய்கள் இல்லாததுமே இதற்கு முக்கிய காரணம்என்றுவிவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

கஷ்டப்பட்டு விளைவித்த நெல், மழையில் நனைந்து வீணானதால், அவற்றின் தரம் குறைந்து விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறது. கொள்முதல் நிலைய அதிகாரிகள் நெல் மூட்டைகளை முறையாக மூடாமலும், உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்பாமலும் அலட்சியம் காட்டுவதால், அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சில இடங்களை த.வெ.க. அமைச்சர்கள் இருவர் சென்று பார்வையிட்டதாக செய்திகள் வந்துள்ளன. அமைச்சர்கள் பார்வையிடுவதால் மட்டுமே விவசாயிகளின் குறைகள் தீர்ந்துவிடாது. அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகளைப் பாதுகாக்க முறையான நடவடிக்கைகளை இந்த அரசாவது மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையங்களிலும் குடோன்கள் அமைக்க உடனடி நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

குடோன்கள் கட்டி முடிக்கப்படும்வரை, போதுமான அளவு தார்ப்பாய்களை கொள்முதல் செய்து நெல் மூட்டைகளைமூடிவைத்து பாதுகாக்க வேண்டும். அரசின் நிதி நிலையைக் காரணம் காட்டி குடோன்கள் அமைக்கும் பணியை தள்ளிப்போடக்கூடாது என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் மாவட்ட நிர்வாகம், போலீஸ் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி: கலெக்டர், எஸ்பி பங்கேற்பு

நாகர்கோவில், ஜூன்.24

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையின் சார்பில் 'மாற்றம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நாகர்கோவிலில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், முன்னிலை வகித்தார். கலெக்டர் குத்துவிளக்கேற்றி, போதைப்பொருள் எதிர்ப்பு லோகோவினை அறிமுகப்படுத்தி, பள்ளி மாணவ மாணவியர்களிடையே பேசியதாவது: குமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை சார்பில், இளைஞர்களிடையே போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மாற்றம் என்னும் உன்னதமான புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தொடக்க விழா மற்றும் விழிப்புணர்வு குறும்பட வெளியீட்டு விழா நடைபெற்றது.

நம்முடைய மாவட்டமானது கல்வியில் சிறந்து விளங்கி, பல அறிவார்ந்த ஆளுமைகளை உருவாக்கிய பெருமைக்குரிய மாவட்டமாகும். இத்தகைய சிறப்புமிக்க மாவட்டத்தில், போதைப்பொருள் என்ற சிறிய கரும்புள்ளியால் இளைஞர்களின் முன்னேற்றமும், மாற்றமும் தடைபட்டு விடக்கூடாது என்ற உயரிய நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆலோசனையின் படி, இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் பேசினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஆர்.ஸ்டாலின் பேசுகையில்:

போதைப் பழக்கம் முதலில் ஒழுக்கமின்மையை ஏற்படுத்தும். பின்னர் உங்கள் கல்வி திறனை பாதித்து இறுதியில் குடும்பத்தின் நம்பிக்கையை இழக்க வைத்து விடும். மாணவர்கள் தான் அந்த குடும்பத்தின் கலங்கரை விளக்கம். போதைக்கு அடிமையாகி விடுவதால் பெற்றோர்களின் கனவை சிதைத்து விடுகிறார்கள்.

மாணவர்களாகிய உங்களுடைய மனம் தடுமாறி விடாமல் நல்வழியில் சிந்தனையுடன் செல்ல வேண்டும். போதை பழக்கத்திற்கு எந்த விதத்திலும் அடிமையாகி விடக் கூடாது. அவ்வாறு அடிமையாகி விட்டவர்களை மீட்க காவல்துறையால் மட்டும் முடியாது. அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த மாற்றம் என்ற இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பேசினார்.

தொடர்ந்து மாவட்ட காவல்துறையினரால் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டார்கள். இந்த விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆரோக்கிய பிரின்ஸ் ராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் சகிலாபானு, துறை அலுவலர்கள், காவல் துறையினர், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

அமோனியா கசிவு காரணமாக உயிரிழப்பு குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்

சென்னை, ஜூன் 24

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தனியார் இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிந்து, ஊழியர்கள் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சம்பவம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்துகிறது. விபத்தின்போது ஊழியர்கள்பாதுகாப்பு விதிமுறைகளை மீறி, அருகிலுள்ள அறையிலேயே தங்க வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இந்த செய்தி உண்மையெனில், இது கடுமையான மனித உரிமைமீறல்என்று ஆணையம் கருதுகிறது. இதையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசின் தலைமை செயலாளர் மற்றும் காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் உடல்நிலை, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு அறிவித்துள்ள நிவாரண நிதி உள்ளிட்ட விபரங்கள் இந்த அறிக்கையில் எதிர்பார்க்கப்படுகின்றன. ஊடக செய்திகளின்படி, விபத்து நடந்தவுடன் சென்னை மற்றும் திருவள்ளூரில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 59 ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த 3 பேர் கொண்ட குழுவை அமைக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்துக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்: தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, ஜூன் 24

தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

திருப்பரங்குன்றத்தில் விளக்கேற்றுவது என்பது தமிழக இந்துக்களின் அடிப்படை உரிமை உணர்வு. இது மறுக்கப்பட்டபோது தான் அவர்கள் வெகுண்டெழுந்தார்கள். இந்துக்களின் இந்த இயல்பான உணர்வை ஏதோ மதக்கலவரம் போலவும், பிரிவினையை ஏற்படுத்தும் என்பதை போலவும் ஒரு தோற்றத்தை அரசு ஏற்படுத்தியது.

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் இந்துக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், சிறுபான்மையினரை பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் இந்துக்களை முற்றிலுமாக புறந்தள்ளினார்கள். தமிழக மக்கள் அதனால் அவர்களை புறந்தள்ளினார்கள். ஆனால் தற்போதைய அரசும்

அதே பாதையில் செல்வது வருத்தத்திற்குரியது.

திருப்பரங்குன்றத்தில் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை அணுகி இருப்பது,

நீங்கள் நீதிமன்றம் செல்கிறோம் என்று நினைக்கிறீர்கள்; ஆனால் இந்துக்களுக்கான நீதி மறுக்கப்படுகிறது என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

சென்ற அரசு மாதிரி இல்லாமல், இந்த அரசு உடனே இந்துக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, பூரண சந்திரன் என்ற தம்பி அதற்காகவே உயிரை மாய்த்திருக்கிறான் என்பதையும் மனதில் கொண்டு, திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரத்தை ஒரு சட்டப் பிரச்சினையாக மாற்றாமல், மதப் பிரச்சினையாகவும் மாற்றாமல், உணர்வுபூர்வமான உரிமை என்ற விதத்தில் அதற்கு அனுமதி அளித்து அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுக்கு ஜூலை 31க்குள் விண்ணப்பிக்கலாம்: ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்

சென்னை, ஜூன் 24

தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

சாதி பாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தை கடைபிடிக்கும் ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் தகுதி படைத்த 10 ஊராட்சிகளுக்கு தலா 1 கோடி ரூபாய் ஊக்க தொகையும் அதனுடன், சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதும் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

இதனடிப்படையில் 2026 27 ஆம் ஆண்டிற்கான "சமூகநல்லிணக்கஊராட்சி" விருது பெற விரும்பும் ஊராட்சிகள் விண்ணப்படிவத்தினையும், அதற்குரிய ஆவணங்களையும் இணைத்து அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 31.07.2026க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அதன் படி இவ்விருதிற்கான விண்ணப்ப படிவத்தினை https://cms.tn.gov.in/cms_migrated/document/forms/social_award_app_26_27.pdf என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்று கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

ஷ்யாமா பிரசாத் முகர்ஜி நினைவு தினம் நயினார் நாகேந்திரன் அஞ்சலி

சென்னை, ஜூன் 24

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஷ்யாமா பிரசாத் முகர்ஜி நினைவு தினத்தை முன்னிட்டு,

இன்று சென்னை கமலாலயத்தில் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினோம்.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் அகில இந்திய ஒற்றுமைக்காக தன்னலமற்ற அர்ப்பணிப்புடன் பாடுபட்ட ஷ்யாமா பிரசாத் முகர்ஜி தியாகங்களையும், "ஒரே நாடு – ஒரே அரசியலமைப்பு" என்ற அவரது உயர்ந்த தேசியக் கொள்கையையும் இந்நாளில் நன்றியுடனும் பெருமையுடனும் நினைவுகூர்ந்தோம்.

தேசத்தின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த தனது வாழ்நாளையே அர்ப்பணித்த அந்த மாமனிதருக்கு எங்கள் ஆழ்ந்த மரியாதையையும் புகழஞ்சலியையும் செலுத்துகிறோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கனவுகளை நனவாக்க தொடர்ந்து துணை நிற்போம் சி.டி.ஆர். நிர்மல் குமார்

சென்னை, ஜூன் 24

ஒவ்வொரு வருடமும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர்சட்டப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசின் முகவராக இருந்து, தமிழ்நாட்டில் அமைந்துள்ள 26 சட்டக் கல்லூரிகளில் (15 அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் 11 தனியார் சட்டக் கல்லூரிகள், சேலம் மத்திய சட்டக் கல்லூரி நீங்கலாக) பயிற்றுவிக்கப்படும் 5 ஆண்டு பி.ஏ.எல்எல்.பி (B.A.LL.B) முறைசார் சட்டப் படிப்பிற்கான மாணவர்கள் சேர்க்கையை, ஒருங்கிணைந்த ஒற்றை சாளர சேர்க்கை முறையில் நடத்தி வருகிறது.

மேலும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகமானது, தனது சீர்மிகு சட்டப்பள்ளியின் வாயிலாக வழங்கப்படும் 5

ஆண்டு ஒருங்கிணைந்த சிறப்பு சட்ட பட்டப்படிப்புகளான பி.ஏ.எல்எல்.பி. (Hons.), பி.பி.ஏ.எல்எல்.பி.(Hons.), பி.காம்.எல்எல்.பி.(Hons.) மற்றும் பி.சி.ஏ.எல்.எல்.பி. (Hons.) போன்ற (ஹானர்ஸ்) சட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையும் நடத்தி வருகிறது.

இந்த விழாவில், எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் இணைவேந்தருமான சி.டி.ஆர்.நிர்மல்குமார்தலைமை தாங்கி, முதன்மை தரவரிசை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கைக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை நேரடியாக வழங்கி சிறப்புரையாற்றினார்.

எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகத்தின் 2026–27 ஆம் கல்வியாண்டிற்கான 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்புகளில் சேருவதற்கான கட்ஆப் தரவரிசை பட்டியலில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு சேர்க்கைக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினோம்.

தரமான சட்ட கல்வி அனைவருக்கும் எளிதில் சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் அரசின் நோக்கம். மாணவர்களின் கனவுகளை நனவாக்க தொடர்ந்து துணை நிற்போம்.

"குட்டிக்கதை சொல்கிறேன் என்ற முதல்அமைச்சரின் உளறல்.." உதயநிதி ஸ்டாலின் பரபரப்பு பதிவு

சென்னை, ஜூன் 24

தமிழ்நாடு சட்டசபை நிறைவு நாளான இன்று, முதல்அமைச்சர் ஜோசப் விஜய் கவர்னர் உரைக்கு பதிலுரை வழங்கி பேசினார். அப்போது முதல்அமைச்சர் விஜய், கடந்த தி.மு.க ஆட்சி குறித்து பல விமர்சனங்களை வைத்தார். டாஸ்மாக்கில் கட்சி நிதி என்று அடித்த கொள்ளை ஒவ்வொன்றாக கஜானாவிற்குள் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்றார்.

இதனைத்தொடர்ந்து, முதல்அமைச்சர் விஜய் பேச்சுக்கு தி.மு.க உறுப்பினர் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர். விஜய் பேசி முடித்ததும் உங்களுக்கு பேச வாய்ப்பு வழங்கப்படும் என்று சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர் அறிவித்தார். பின்னர் முதல்அமைச்சர் விஜயின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து பேரவையில் இருந்து

தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள வலைதளத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

சட்டப்பேரவையில் கவர்னர் உரைக்கு பதிலுரை என்ற பெயரில் scripted அவதூறுகளை அள்ளிவீசி acting performance காட்டி இருக்கிறார் முதல்அமைச்சர்.

பேரவையின் live Camera வை, சினிமா camera என்று நினைத்துக் கொண்டு அவர் பேச, அதனை எதிர்க்கட்சிகளின் குறுக்கீடுகள் இன்றி single takeஇல் shoot செய்ய வேண்டும் என்று பேரவைத் தலைவர் மெனக்கெட்டது ஏற்புடையது அல்ல.

முதல்அமைச்சரின் பதிலுரையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும் பஞ்ச்டயலாக்கும்மட்டும்தான்இருந்ததே தவிர, மின்வெட்டு விவசாயிகள் பிரச்சினை மோசமாகி இருக்கும் சட்டம் ஒழுங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் பற்றி எந்த பதிலும் இல்லை.

எதிர்க்கட்சிகள் தூண்டுதலில் விவசாயிகள் போராடுவதாக விவசாயிகளை அவர் கொச்சை செய்ததுக் கண்டிக்கத்தக்கது.

குட்டிக்கதை சொல்கிறேன் என்ற அவரது உளறல் அவை மாண்புக்கு முற்றிலும் எதிரானது. செங்கல்பட்டு கோர்ட்டில் கணவனை தேடும் மனைவி கதை எல்லாம் தமிழ்நாட்டுக்கே தெரியும். ஆகவே, நடிகர் விஜய் என்பதை மறந்து, இனியாவது முதல் அமைச்சர் விஜய்யாக நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லை: பத்தமடை காவல் நிலையத்தில் தீக்குளித்த தச்சு தொழிலாளரால் பரபரப்பு

திருநெல்வேலி, ஜூன் 24

திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன் (42). இவர் தச்சு தொழில் செய்து வந்தார். இவருக்கும், இவரது வீட்டிற்கு அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும் இடையே வழிப்பாதை தொடர்பாக தகராறு இருந்தது.

வழிப்பாதையை சீரமைத்து தருமாறு அதிகாரிகளிடம் புகார் கொடுத்துள்ளார். ஆனால், அவர்கள் இதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் மனமுடைந்த சீனிவாசன் ஒரு விபரீத முடிவை எடுத்தார். வழிப்பாதையை சீரமைக்க கோரி அதிகாரிகளிடம்

புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையில் விரக்தியடைந்த அவர், நேற்று பத்தமடை காவல் நிலையத்திற்கு சென்றார். அங்கு யாரும் எதிர்பாராத நிலையில், தனது உடலில் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு காவல் நிலையத்திற்குள் ஓடியுள்ளார்.

இதையடுத்து அங்கிருந்த போலீஸார் தீயை அணைத்து, அவரை உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர இளம்பெண் பாலியல் வன்கொடுமை வழக்கு; இன்று முதல் சாட்சி விசாரணை தொடக்கம்

சென்னை ஜூன் 24

ஆந்திராவில் இருந்து திருவண்ணாமலைக்கு சாமி கும்பிட வந்த இளம் பெண் பாலியல் வன்கொடுமை வழக்கில் நாளை முதல் சாட்சி விசாரணை தொடங்கப்படுகிறது.

ஆந்திராவில் இருந்து திருவண்ணாமலைக்கு சாமி கும்பிட வந்த 26 வயது இளம்பெண்ணை, திருவண்ணாமலை கிழக்கு போலீஸ் நிலைய போலீஸ்காரர்களான சுந்தர், சுரேஷ் ராஜ் ஆகியோர் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இதுகுறித்து, திருவண்ணாமலை அனைத்து மகளிர் போலீசார் வழக்குப் பதிவு செய்து, இருவரையும் கைது செய்தனர். இந்த வழக்கு திருவண்ணாமலை மாவட்ட மகளிர் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கை விரைவாக விசாரித்து முடிக்க உத்தரவிடக்கோரி சென்னை ஐகோர்ட்டில், பாதிக்கப்பட்ட பெண் பொது நல வழக்கு தாக்கல் செய்தார். அந்த மனுவில், "குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகளை சட்டப்படி இரண்டு மாதங்களில் முடிக்க வேண்டும் என சிறப்பு கோர்ட்டுகளுக்கு உத்தரவிடவேண்டும். தற்

போது மாநிலம் முழுவதும் எத்தனை பாலியல் வன்கொடுமை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது குறித்த விவரங்களை சமர்ப்பிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்றும் கூறியிருந்தார்.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க தமிழ்நாடு அரசு அதிக முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் அளிக்க வேண்டும் என்றும் அரசு தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, அட்வகேட் ஜெனரல் விஜய் நாராயண் ஆஜராகி, "ஆந்திர பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள போலீஸ்காரர்களுக்கு எதிராக கடந்த 17 ந்தேதி குற்றச்சாட்டுகள் பதியப்பட்டன. நாளை முதல் சாட்சி விசாரணை தொடங்கப்படவுள்ளது.

ஐகோர்ட்டு ஏற்கனவே இந்த வழக்கு விசாரணையை வரும் ஜூலை 31ந்தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தமிழ்நாடு அரசு தீவிரமாக கருதுகிறது. போக்சோ மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து விசாரிக்கும் வகையில் விரிவான வழிகாட்டு நெறி முறைகளை வகுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு இருவார கால அவகாசம் வழங்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து நீதிபதிகள், "ஆந்திர பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கை திருவண்ணாமலை மகளிர் கோர்ட்டு விரைந்து விசாரித்து முடிக்க வேண்டும்.

குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளை விசாரிக்கும் போக்சோ சிறப்பு கோர்ட்டுகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?

இன்னும் எந்தெந்த மாவட்டங்களில் போக்சோ சிறப்பு கோர்ட்டுகள் இல்லை. போக்சோ கோர்ட்டுகளின் தற்போதைய செயல்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்தும், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவான அறிக்கையை தமிழ்நாடு அரசும், ஐகோர்ட்டு பதிவுத்துறையும் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணையை 2 வாரத்துக்கு தள்ளி வைக்கிறோம்" என்று உத்தரவிட்டனர்.

கத்தாரில் எரிவாயு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் நெல்லையை சேர்ந்த 3 பேர் உயிரிழந்த சோகம்

தோஹா ஜூன் 24

கத்தார் எரிவாயு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 12 இந்தியர்கள் உள்பட 13 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே ஏற்பட்ட கடுமையான போரின் போது, கத்தார் நாட்டின் ராஸ் லப்பான் பகுதியில் உள்ள முக்கிய இயற்கை எரிவாயு ஆலையில் ஏற்றுமதி முனையம் குண்டுவீச்சால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதனால் அங்கிருந்து மற்ற நாடுகளுக்கு எரிவாயு ஏற்றுமதி செய்யும் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், போரை

நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தைகள் தற்போது உலக நாடுகளிடையே தீவிரமாகத் தொடங்கின. இதன் காரணமாக, கடலில் நிலவி வந்த பதற்றம் சற்றே தணிந்ததைத் தொடர்ந்து, கத்தார் அரசு தனது மூடிக்கிடந்த எரிவாயு ஏற்றுமதி முனையத்தை மீண்டும் இயக்கி, உற்பத்தியை தொடங்க திட்டமிட்டது.

இதற்காக, ஊழியர்கள் மற்றும் என்ஜினீயர்கள் அங்குள்ள பர்சான் எரிவாயு வினியோக ஆலையில் மறுசீரமைப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக அங்கு பயங்கர சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டு, ஆலை முழுவதும் தீப்பற்றி எரிந்தது.

இந்த கோர விபத்தில் ஆலையில் பணியாற்றிக் கொண்டிருந்த இந்தியர்கள் உள்பட 13 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். 66 தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர். மேலும், 18 தொழிலாளர்கள் மாயமாகியுள்ளனர். காயமடைந்த தொழிலாளர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதம்

தஞ்சாவூர் ஜூன் 24

பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி தஞ்சாவூரில் தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்

தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்ற போராட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் எல். பழனியப்பன் தலைமை வகித்தார் மாநிலப் பொதுச் செயலர் கே. செந்தில் குமார் முன்னிலை வகித்தார் இதில், தேர்தல்அறிக்கையில் த. வே.க கொடுத்த வாக்குறுதியின் படி விவசாயிகளின் கூட்டுறவு பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் காவிரியின் குறுக்கே மேகதாது வில் கர்நாடக அரசு கட்டும் தடுப்பணைகள் மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது. காவிரி மேலாண் மை ஆணைய உத்தரவுப்படி காவிரியில் தமிழகத்துக்குரிய மாதாந்திர நீர் பங்கிட்டு உடனே வழங்க வேண்டும். விவசாயிகள் விளைவித்த நெல் மணிகளை தமிழக

அரசு உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். குறுவை தொகுப்பு திட்டத்திற்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண் டும். ஆழ்குழாய் மூலம் பயிர் சாகு படி செய்துள்ள விவசாயிகளுக்கு பயிர் கடன்களை உடனடியாக வழங்க வேண்டும். மத்திய அரசு உயர்த்தி உள்ள உரங்களின் விலையை திரும்ப பெற வேண்டும் வருகின்ற கொள் முதல் பருவத்தில் நெல்லுக்கு குவிண்டலுக்கு ரூபாய் 3500விலையை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியு றுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது

போராட்டத்தில் தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்க செயலர் சுந்தர.விமலநாதன், சங்கத்தின் மாவட்ட செயலாளர் எம் மணி, ரவிச்சந்திரன் தெற்கு மாவட்ட பொருளாளர் சௌந்தர் ராஜன், மாநகர செயலாளர் அறிவு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

24.06.2026

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு வட்டம் ஆவணியாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2526 கடந்த கல்வியாண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவிகளுக்கு காலை இறைவணக்க் கூட்டத்தில் தலைமை ஆசிரியர் முன்னிலையில் முன்னாள் மாணவர்கள் சார்பாக மிதிவண்டி வழங்கப்பட்டது. இதில் இருபாலான ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கலந்துக் கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட கலெக்டரக அலுவலக கூட்டரங்கில் வங்கியாளர்களுடன் வங்கித்துறை செயல்பாடுகள் மற்றும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டம் திருவாரூர் மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் கோட்டக்லைப் கம்பெனியின் சார்பில் 14 வதுஆண்டு விழா மன்னார்குடியில் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் திருக்ஷேக்தாவுதுகிளை மேலாளர் திருமதி கீர்த்திகா சுரேஷ் திரு விக்ரம் திரு ஜெயசெல்வன் திரு சரவணன் திரு சுப்புராயிலு ஆசிரியர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்

சட்டமன்றத்தில் அதிகமாக பேசுபவர் முதல்வர்தான் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பேட்டி

பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனரும், அதன் முதல் தலைவருமான டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் நினைவு தினத்தையொட்டி பா.ஜ.க. மாநில தலைமை அலுவலகமானகமலாலயத்தில்அவரதுஉருவப்படத்திற்கு மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மேலிடப் பொறுப்பாளர் அரவிந்த் மேனன் மற்றும் நிர்வாகிகள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய நயினார் நாகேந்திரன் பிரதமர்நரேந்திரமோடிமற்றும்மத்தியஉள்துறைஅமைச்சர் அமித்ஷாவின் உறவினர்கள் தான் ஆளுநராக நியமனம் செய்யப்படுகிறார்கள் என்ற அமைச்சர் நிர்மல் குமாரின் குற்றச்சாட்டுக்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன், நிர்மல் குமார் சட்டப்படித்து இருக்கிறாரா என்பது எனக்கு தெரியவில்லை. திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நீதிபதி உத்தரவைக்கூட நிறைவேற்ற முடியாது என சொன்னால் அவர் அமைச்சராக நீட்டிக்க தகுதியில்லாதவர்.தமிழக வெற்றி கழகம் போன்ற சாதாரண கட்சி இல்ல பா.ஜ.க. இனி வரக்கூடிய காலத்தில் எத்தனை தேர்தல் வந்தாலும் பா.ஜ.க. தான் இந்தியாவை ஆளப்போகிறது. சட்டமன்றத்தில் அதிகமாக பேசுபவர் முதல்வர்தான். சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு இதுவரை முதல்வர்பதிலளிக்கவில்லை. நிர்மல் குமார்ஒருகாலத்தில் பா.ஜ.க.வில் அடுத்து அ.தி.மு.க.வில் பிறகு தமிழக வெற்றிக்கழகம் அடுத்து எங்கு போக இருக்கிறார் என்பது தெரியவில்லை. நிர்மல் குமார் நீங்கள் சட்டம் படித்தவர் நானே. மு முதல்வர் செய்கை இன்னும் சினிமாவில் நடிப்பது போன்று சட்டமன்றத்தில் இருக்கிறார். இதுபோன்று முன்பு செய்தவர்களின் நிலை என்னானது என்பது நமக்கு தெரியும். முதல்வர் தனது தகுதியை அறிந்து அதற்கான சட்டமன்றத்தில் மறபோடு நடக்க வேண்டும் என்றார்.

இன்றைய ராசி பலன்கள் (24.06.2026)

மேஷம்: வேலை மற்றும் தொழிலில் முன்னேற்றம் காணப்படும். புதிய முயற்சிகளில் நம்பிக்கையுடன் செயல்படலாம்

ரிஷபம்: பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும்

மிதுனம்: தொடர்பாடல் திறன் அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்: செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை.

சிம்மம்: தொழிலில் பாராட்டு கிடைக்கலாம். நீண்டநாள் திட்டங்கள் முன்னேறும்.

கன்னி: புதிய வாய்ப்புகள் தேடி வரும். கல்வி மற்றும் வேலை தொடர்பான முயற்சிகள் சாதகமாக இருக்கும்.

துலாம்: பொறுமையுடன்செயல்படவேண்டிய நாள். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: பொருளாதார நிலை மேம்படும். குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

தனுசு: பயணம் அல்லது புதிய தொடர்புகள் மூலம் நன்மை கிடைக்கலாம். தன்னம்பிக்கை உயரும்.

மகரம்: வேலையில் பொறுப்புகள் அதிகரித்தாலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

கும்பம்: மனஅழுத்தம் குறையும். முக்கிய முடிவுகளை ஆராய்ந்து எடுக்கவும்

மீனம்: ஆன்மீக சிந்தனைகள் அதிகரிக்கும். பண விஷயங்களில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சரும் திமுக சட்டமன்ற உறுப்பினருமான சேகர்பாபு செய்தியாளர்களை சந்தித்தார்

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சரும் திமுக சட்டமன்ற உறுப்பினருமான சேகர்பாபு செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது, குன்னூர் வினாயகர் கோவில் மல்டி லெவல் கால் பார்க்கிங் விவகாரம் குறித்து விளக்கம் அளித்தார் அப்போது அவர் பேசியதாவது,....

நடந்து முடிந்த சட்டப்பேரவையில் குன்னூர் விநாயகர் கோயிலில் மல்டி லெவல் கார் பார்க்கிங் வரம்புக்கு மீறி கட்டப்பட்டதாக இந்து சமய அற நிலைத்துறை அமைச்சர் குற்றசாட்டை முன் வைத் துள்ளார். இதற்கு விளக்கம் அளிக்க சட்டப்பேர வையில் எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

குன்னூரில் உள்ள விநாயகர் கோவிலுக்கு மல்டி லெவல் கார் பார்க்கிங் தேவை என்று கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கை வைத்ததற்கு இணங்க கோயிலுக்கு தேவைப்படும் நிதியை மருதமலை கோயிலில் இருந்து, கடனாக பெறுவதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மரு தமலை கோயிலின் உள்ள அறங்காவலர்கள் சம்ம தத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மல்டி லெவல் கார் பார்க்கிங் கட்டப்பட்டது. இதில் என்ன தவறு நடந்துள்ளது என அறநிலையைத் துறை அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார் என்று எனக் குத் தெரியவில்லை.

கமர்ஸியல் என்பது திருக்கோயிலின் வருமானங் களை ஈட்டுவதற்கான முயற்சி. குன்னூர், சுற்றுலா பகுதி என்பதால் தினந்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இடமாக உள் ளது அங்கே வாகனங்கள் நிறுத்த முடியாத சூழல் இருப்பதால், கோவில் பக்தர்கள் மட்டுமல்லாமல் சுற்றுலா பயணிகளும் பயன்படுத்தும் வகையில் மல்டி லெவல் கார் பார்க்கிங் கட்டிக் கொடுக்கப் பட்டது. அதில் வரும் கட்டணத்தை வைத்து ஊட் டியில் இருக்கும் 52 திருக்கோயில்களில், நழிவ டைந்த ிருக்கோயில்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான தொலைநோக்கு போர்வையாகத்தான் அது செயல் படுத்தப்பட்டது.

இதை முழுமையாக உணராமலும் புரியாமலும் ஒரு அமைச்சர் அவசரகதியில் பேசுகிறார். இனிமே லாவது அந்தத் திட்டம் ஏன் செயல்படுத்தப்பட் டது என்ற உண்மை நிலையை அமைச்சர் உணர வேண்டும். இதுவரையில் அத்திட்டத்திற்கு உண் டான அனுமதி ரத்து செய்யப்படவில்லை. பக்தர் கள் மட்டுமல்லாது சுற்றுலா பயணிகளுக்கும் சேர்த்துத்தான் கார் பார்க்கிங் ஏற்படுத்தப்பட்டதே தவிர வெறும் திருக்கோவிலுக்கு மட்டுமான பயன் பாட்டிற்கு மல்டி லெவல் கார் பார்க்கிங் கட்டப்ப டவில்லை.

நலிவடைந்த திருக்கோயில்களின் நிலையை மேம்படுத்துவதும், வருகின்ற பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்வதற்கு உண்டான வருவாயை உயர்த்துவதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அறி வார்ந்த அனைவரும் இதனை வரவேற்பார்கள்.

பேரவையில் அமைச்சர்கள் கூறிய கருத்திற்கு எதிர்தரப்பினர் சரியான வாதத்தை தெரிவித்தார்கள் என்றால் அதற்கான அனுமதியை எப்போதும் தர மாட்டார்கள். அனுமதி மறுப்பார்கள் அதுதான் நேற்றைக்கும் முழுமையாக நடைபெற்றது. அடிக்க அடிக்க உயிரும் பாந்துபோல், திமுக மேலும் மேலும் நிமிர்ந்து திமிரி நிற்கும் உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் அஞ்சுகின்ற இயக்கம் திமுக அல்ல.

அஜித்தின் "ஏகே 64" படத்தின் அப்டேட்...

MJAடிகர் அஜித் குமாரின் 64வது படம் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

திக் ரவிச்சந்திரன் இயக்கத்தில், அஜித்குமார் நடிப்பில் இறுதியாக வெளியான படம் 'குட் பேட் அக்லி'. இப்படம் அஜித்குமார் ரசிகர்களுக்கு நல்ல ட்ரீட்டாக அமைந்தது. அர்ஜுன் தாஸின் நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. மேலும் நடிகர் பிரபு, பிரசன்னா, திரிஷா என பலர் நடித்திருந்தனர்.

மீண்டும் அஜித்குமாரின் புதிய படத்தை ஆதிக் ரவிச்சந்திரனே இயக்கவுள்ளார். இது அஜித்குமாரின் 64வது படமாகும். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'ஏகே 64'என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தின் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று அஜித் சமீபத்தில் கலந்து கொண்ட பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். 'ஏகே 64' படத்திற்கான முன்தயாரிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

நடிகை ரெஜினா அஜித்தின் 64வது திரைப்படத்தில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இவர் 'விடாமுயற்சி' திரைப்படத்தில் அஜித்துக்கு வில்லனாக நடித்திருந்தார். இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடிகை ஸ்ரீலீலா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரபல தெலுங்கு தயாரிப்பாளரான அனில் சுங்கரா, ஏகே எண்டர்டெயின்மெண்ட்ஸ் என்கிற பெயரில் இப்படத்தைத் தயாரிக்க உள்ளதாகவும், நடிகர் அஜித் குமாரும் இணைந்து தயாரிப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், 'ஏகே 64' படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் சில நாள்களில் வெளியாகிவிடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதம் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகளிர் டி20 உலகக் கோப்பை: இலங்கைக்கு 131 ரன்கள் இலக்கு நிர்ணயித்த அயர்லாந்து

மகளிர் டி20 உலகக் கோப்பையில் 20வது லீக் ஆட்டத்தில் இலங்கைக்கு 131 ரன்கள் இலக்கு நிர்ணயித்துள்ளது அயர்லாந்து.

12அணிகள்பங்கேற்றுள்ள10வதுமகளிர்டி20உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்று வரும் 20வது லீக் ஆட்டத்தில்அயர்லாந்துமற்றும்இலங்கைஅணிகள்பலப்பரீட்சை நடத்தி வருகின்றன.

இந்திய நேரப்படி இரவு 7 மணிக்கு தொடங்கிய இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து பேட்டிங்கை தொடங்கிய அயர்லாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

தொடக்க வீராங்கனை ஆமி ஹண்டர் மற்றும் மூன்றாவது இடத்தில் களமிறங்கிய ஓர்லா பிரெண்டர்காஸ்ட் இருவரும் ரன் ஏதுமின்றி ஆட்டமிழந்தனர். தொடர்ந்து ரெபேக்கா ஸோகெல் 12 பந்துகளில் 13 ரன்கள் எடுத்து வெளியேறினார்.

அதன்பின்னர் கேப்டன் கேபி லூயிஸ் மற்றும் லியா பால் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். நிதானமாக விளையாடிய லியா பால் 27 பந்துகளில் 20 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் சிறப்பாக விளையாடிய கேபி லூயிஸ் அரைசதம் கடந்து அசத்தினார். அவருடன் ஆலிஸ் டெக்டர் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினார். சிறப்பாக ஆடிய கேபி லூயிஸ், 50 பந்துகளில் 59 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில், 20 ஓவர்கள் முடிவில் அயர்லாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 130 ரன்கள் எடுத்தது. இதையடுத்து, 131 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்க உள்ளது.

தமிழ் ரசிகர்களின் அன்புக்கு என்றுமே கடமைப்பட்டுள்ளேன் மாளவிகா மனோஜ்

மீரா கதிரவன் இயக்கத்தில் ஈசா, மாளவிகா மனோஜ், அருள்குமார், தனஸ்ரீ சுதாகரன், அனுஸ்ரேயா ராஜன் உள்ளிட்டோர் நடித்த 'ஹபீபி' படம் சமீபத்தில் வெளியானது. 1980களில் தென்தமிழகத்தில் வாழும் தமிழ் இஸ்லாமிய மக்களின் வாழ்வியலையும், கலாசாரத்தையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப் படம் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றது.

'ஹபீபி' படத்தின் வெற்றியை சென்னையில் படக்குழுவினர் கொண்டாடினர். இந்த நிகழ்வில் நடிகை மாளவிகா மனோஜ் பங்கேற்று பேசும்போது, "ஹபீபி நான் தமிழில் நடித்த முதல் படம். ஆனாலும் பல தடைகளை தாண்டி காலதாமதமாக வந்து 'ஹிட்' அடித்திருக்கிறது. சினிமாவில் பட்ட கஷ்டமும், உழைப்பும் வீண் போகாது.

தமிழ் ரசிகர்கள் எனது விருப்பத்துக்குரியவர்கள். அவர்களின் அன்புக்கு என்றுமே நான் கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்து நல்ல படங்களில் நடித்து ரசிகர்களின் அன்பை காப்பாற்றுவேன்", என்றார்.

ஊக்கமருந்து சோதனைக்கு மறுப்பு முன்னாள் விம்பிள்டன் சாம்பியனுக்கு 4 ஆண்டுகள் தடை

செக்குடியரசை சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை மார்கெட்டா வோன்ட்ரோசோவா, ஊக்கமருந்து சோதனைக்கு ஒத்துழைக்க மறுத்ததற்காக 4 ஆண்டுகள் விளையாட தடை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம், ஊக்கமருந்து சோதனைக்காக ரத்தம் அல்லது சிறுநீர் மாதிரிகளை சேகரிக்க சென்ற அதிகாரிகளிடம், வோன்ட்ரோசோவாஅவற்றைவழங்கமறுத்ததாகக்கூறப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக சர்வதேச டென்னிஸ் சங்கத்தின் நேர்மை கமிட்டி விசாரணை நடத்தியது. அதில், ஊக்கமருந்து சோதனைக்கு வோன்ட்ரோசோவா ஒத்துழைக்க மறுத்தது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, 26 வயதான மார்கெட்டா வோன்ட்ரோசோவாவுக்கு4ஆண்டுகள்போட்டிகளில்பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

மார்கெட்டா வோன்ட்ரோசோவா, 2023ம் ஆண்டு விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று உலக டென்னிஸ் அரங்கில் கவனம் ஈர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யோகி பாபுவின் "அர்ஜுனன் பேர் பத்து" படத்தின் "சாமி தந்த வரமே" பாடல் வெளியீடு

நடிகர் யோகி பாபு நாயகனாக நடிக்கும் புதிய திரைப்படத்திற்கு 'அர்ஜுனன் பேர் பத்து' என பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை, அறிமுக இயக்குநர் ஆர். ராஜ்மோகன் இயக்கியுள்ளார்.

இசையமைப்பாளர் டி.இமான் உருவாகியுள்ள இப்படத்தில் நடிகர்கள் காளி வெங்கட், அருள்தாஸ், லெனின் பாரதி, சென்றாயன், மைனா நந்தினி, அனாமிகா மஹி ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், நடிகர் யோகி பாபு நாயகனாக நடிக்கும் 'அர்ஜுனன் பேர் பத்து'திரைப்படத்தின் டீசர் கடந்த மார்ச் 18 ம் தேதி வெளியானது. இது யோகி பாபு நடிக்கும் 300 ஆவது திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், யோகி பாபு நடிப்பில் உருவாகியுள்ள 'அர்ஜுனன் பேர் பத்து' திரைப்படத்தின் 'சாமி தந்த வரமே' பாடல் நாளை காலை 11.11 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

'பெருங்கனவு நனவாகியுள்ளது' இந்திய ஜெர்ஸியை பெற்ற வைபவ் சூர்யவன்ஷி நெகிழ்ச்சி

இந்திய ஜெர்ஸியை பெற்ற வைபவ் சூர்யவன்ஷி நெகிழ்ச்சி பெருங்கனவு இன்று நனவாகியுள்ளதாக நெகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஐபிஎல்தொடரில்ராஜஸ்தான்ராயல்ஸ்அணிக்காகஅபாரமாக விளையாடி கவனம் ஈர்த்த 15 வயதான வைபவ் சூர்யவன்ஷி, அயர்லாந்து மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடர்களுக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணிக்கான ஜெர்ஸியை பெற்றுக்கொண்ட வைபவ் சூர்யவன்ஷி, வரும் 26ம் தேதி அயர்லாந்துக்கு எதிரான டி20 போட்டியில் இந்திய அணிக்காக களமிறங்கும் வாய்ப்பை பெற்றுள்ளார். இந்திய ஜெர்ஸியை கையில் ஏந்திய அவரது புகைப்படங்கள்சமூகவலைதளங்களில்வைரலாகிவருகின்றன.

இந்நிலையில், தேசிய அணியில் தேர்வானது குறித்து வீடியோ ஒன்றில் பேசிய வைபவ் சூர்யவன்ஷி, "இந்த உணர்வை விவரிக்க என்னிடம் வார்த்தைகளே இல்லை. ஆரம்பத்தில் நான் எந்த காரணத்திற்காக கிரிக்கெட் பேட்டை கையில் எடுத்துக்கொண்டு மைதானத்திற்கு பயிற்சி செய்ய சென்றேனோ, அந்த பெருங்கனவு இன்று நனவாகியுள்ளது. இந்திய டி20 அணியில் தனக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பு, தனது ஆரம்பகால கிரிக்கெட் வாழ்க்கையின் மிக பெரிய காரணி மற்றும் முக்கிய படி" என்று உணர்ச்சிபூர்வமாக தெரிவித்துள்ளார்.

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS No. 7/253, KVN PURAM 2 2ND STREET, KILPAUKGARDEN, CHENNAI 600010. AND PUBLISHED AT No.28, THALIKATTIPALAYAM, KAITHAMALAI ROAD, UTTUKULI, TIRUPPUR - 638751. EDITOR: KANI RAJA V.